**செய்தி வெளியீடு எண்: 823** **நாள்: 10.11.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை</u>**

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் மனைகளை வாங்கியோரின் நலன்களை காக்கும் நோக்கிலும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளுக்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் வகையிலும் அத்தகைய அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்த ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017 மூலம் விதிகள் வெளியிடப்பட்டது. மேற்கூறிய விதிகளில், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்க ஆறு மாத காலக்கெடு அதாவது 03.11.2017 வரை நிர்ணயிக்கப்பட்டது. அக்காலக்கெடு 03.11.2018 வரையிலும் நீட்டிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்க கடைசி நாளான 03.11.2018 அன்று சனிக்கிழமை என்பதால் விடுமுறை நாளாக இருந்தது. மேலும் 06.11.2018 வரை தீபாவளியை முன்னிட்டு விடுமுறை நாட்களாக இருந்தது. அதனால், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்த குறுகிய கால வாய்ப்பு கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதன்படியே அரசு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பங்களை இணையதளம் (www.tnlayoutreg.in) வழியாக 12.11.2018 முதல் 16.11.2018வரை 5 நாட்களுக்கு அனுமதி அளிக்க முடிவுசெய்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**